Department of Education
GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# பணிப்பயிற்சிகளும் பயிலுநர் நிலைகளும்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

பணிப்பயிற்சிகளும் பயிலுநர் நிலைகளும் கற்றல் வழிப்பாதைகளாகும். இவை வேலைப் பயிற்சியின்போதே அதற்கு சம்பளம் பெறுவதையும் ஒரு பதிவுசெய்த பயிற்சி நிறுவனத்தில் முறையாகக் கற்பதையும் இணைக்கிறது. பணிப்பயிற்சி அல்லது பயிலுநர் நிலையை ஒருவர் நிறைவுசெய்ததும் நடைமுறைத் திறமைகளில் தேர்ச்சி பெற்றவராகவும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதி பெற்றவராகவும் இருப்பார்.

பணிப்பயிற்சி அலுவலகம்[1] இணையதளத்திலும் பணிப்பயிற்சி உதவி[2] இணையதளத்திலும் தகவல்களும் உதவியும் கிடைக்கின்றன.

### பணிப்பயிற்சி என்றால் என்ன?

பணி பழகுநர்கள் ஒரு திறமையான வர்த்தகரால் பயிற்சியளிக்கப்பட்டு தகுதிவாய்ந்த வர்த்தகராக தேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) தகுதியைப் பெற்றவராகிறார்கள். ஒரு பணிப்பயிற்சி என்பது வடிவமைக்கப்பட்ட பயிற்சி ஏற்பாடு. இது வழக்கமாக 3.5 அல்லது நான்கு ஆண்டுகள் வரை இருக்கும். பயிற்சியானது வேலையில் உள்ள நடைமுறை அனுபவத்தை வேலைக்குப் பிறகான நேரத்தில் ஒரு பதிவுசெய்த பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி அளிப்பதையும் இணைக்கிறது.

### பயிலுநர்நிலை என்றால் என்ன?

பயிலுநர்கள் செய்தொழிலில் திறமையுடையவர்களாக ஆகி நிறைவுசெய்கையில் ஒரு தேசிய அங்கீகாரம் பெற்ற VET தகுதியை அடைகிறார்கள். பயிலுநர்கள் துறைசார் புரிதலையும் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகளையும் வழங்குகிறார்கள். ஒரு பயிலுநர் நிலை என்பது பயிலுநருக்கும் அவரது பணி வழங்குநருக்கும் இடையிலான ஒரு பயிற்சி ஒப்பந்தமாகும். இதில் பணி வழங்குநர் ஒரு குறிப்பிட்ட துறையில் பயிலுநருக்குப் பயிற்சியளிக்க ஒப்புக்கொள்கிறார். பயிலுநரும் பணிபுரியவும் கற்றுக்கொள்ளவும் ஒப்புக்கொள்கிறார். பயிற்சியானது துறையையும் எடுத்துக்கொண்ட சான்றிதழ் நிலை உயரத்தையும் பொறுத்து வழக்கமாக ஒன்பது முதல் 48 மாதங்கள் வரை நீடிக்கும்.

[1] https://www.dtwd.wa.gov.au/apprenticeship-office
[2] *https://www.apprenticeshipsupport.com.au/Apprentices/What-is-an-apprenticeship*

D23/0256435
February 2023
CC BY
Exclusions may apply

## பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சிகளும் பயிலுநர்நிலைகளும்

பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சிகளும் பயிலுநர்நிலைகளும் ஒரு முழுநேரப் பள்ளி மாணவருக்கும் தொழில் உரிமையாளருக்கும் இடையில் வேலைக்கு ஊதியமளித்து பயிற்சி ஏற்பாடுகளைச் செய்துதருவதாகும்.

பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சிகளும் பயிலுநர் நிலைகளும் இளையோர் தங்கள் மேல்நிலைப் பள்ளிப்படிப்புகளுடன் பகுதிநேர வேலையையும் வேலை நேரத்துக்கு வெளியே பதிவுசெய்த பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியையும் இணைக்க உதவுகிறது. உண்மையான பணிச்சூழலில் தொழில்துறையில் நேரடி அனுபவம் வாயிலாக மாணவர்கள் வேலைக்கான திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் தேசிய அங்கீகாரம் பெற்ற கல்வித்தகுதியையும் பெறுகிறார்கள். பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சி அல்லது பயிலுநர் நிலையானது மாணவரின் விரிவான கல்வித் திட்டத்தின் பகுதியாக ஆகிறது.

## பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சிகளும் பயிலுநர்நிலைகளும் யாருக்காக?

இந்தத் தெரிவானது ஒரு குறிப்பிட்ட வர்த்தகம் அல்லது தொழிலில் வாழ்க்கைத்தொழில் பாதையை அமைக்க விரும்பும் மாணவர்களுக்கும் தங்களது மேல்நிலைப் பள்ளியை நிறைவுசெய்ய விரும்பும் மாணவர்களுக்குமானது.



CC BY
Exclusions may apply

## ஒரு மாணவரின் பயிற்சித் திட்டத்துக்கு பள்ளி ஒப்புதலளிக்க வேண்டுமா?

பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சி மற்றும் பயிலுநர்நிலை வாய்ப்புகளுக்கு மாணவரின் ஒட்டுமொத்த பள்ளித்திட்டத்தின் ஒரு பகுதியாக பள்ளி ஒப்புதல் தேவை.

## பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சி மற்றும் பயிலுநர்நிலை குறித்து மேலும் அறிந்துகொள்ளுங்கள்

பள்ளி VET ஒருங்கிணைப்பாளர்களால் பள்ளி அடிப்படையிலான பணிப்பயிற்சி மற்றும் பயிலுநர்நிலை குறித்த தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்க முடியும். கூடுதல் தகவல்களை பயிற்சி மற்றும் பணியிட மேலாண்மைத் துறை[3] இணையதளத்திலும் பணிகள் மற்றும் திறமைகள் WA[4] இணையதளத்திலும் காணலாம்.

3 https://www.dtwd.wa.gov.au/apprenticeship-office/apprenticeships-traineeships-for-secondary- school-students
4 https://www.jobsandskills.wa.gov.au/training/schools-and-school-students


D23/0256435
February 2023
Exclusions may apply